Phase–III, Phase–IV அமைக்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய முழு விருப்பம். நிச்சயமாக ஒசூரை இன்னும் பத்து ஆண்டுகளில் மிகப் பெரிய தொழில் வளர்ச்சி பெறுகின்ற தலைசிறந்த ஒரு பகுதியாக மாற்றியமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு மிக கவனமாக இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

90—

கால்நடை மருத்துவமனை

*7137—**திருமதி பொன். சரஸ்வதி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோடு தொகுதி, செண்பகமாதேவி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தொகுதி, செண்பகமாதேவி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை துவக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார். கால்நடை பராமரிப்புத் துறைக்கு கேட்டதையெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய அரசு என்று சொன்னால், அது நம்முடைய அம்மா அவர்களுடைய அரசான மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் கடந்த ஆண்டில் 75 கால்நடைக் கிளை நிலையங்களையும், ஏறத்தாழ 50 கால்நடை மருந்தகங்களையும் கொடுத்து, ஒரு வரலாற்றுச் சாதனையைப் படைத்தார்கள். அரசாணை எண் 167, கால்நடை பராமரிப்பு, பால்

2020 மார்ச் 13]

வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 15–11–2019–ன்படி புதியதாக 75 கால்நடைக்கிளை நிலையங்களைத்துவங்க ஆணையிடப்பட்டுள்ளது. அதில் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தொகுதி, செண்பகமாதேவி ஊராட்சியில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்பட்டு, 19–1–2020 முதல் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்மலர் பாதங்களைப் பணிவோடு வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாசியோடு காவேரி டெல்டா பகுதி மக்களின் பாதுகாவலரும், விவசாயிகளுடைய நலன் காப்பவரும், ஏழைகளின் ஏந்தலும், கொங்கு சீமை கொள்கைத் தங்கமுமான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எளிமையின் தோற்றமாய், இனிமையின் உருவமாய், தென்பாண்டித் தங்கமாகத் திகழும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சரும், நாமக்கல் மாவட்டத்தை நல் வழியில் நடத்திச் செல்லும் எங்கள் மாவட்டக் கழகச் செயலாளருமான அண்ணன் அவர்களையும் வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, திருச்செங்கோடு தொகுதி, மல்லசமுத்திரம் ஒன்றியம், செண்பகமாதேவி ஊராட்சி மக்களின் கோரிக்கையினை ஏற்று கால்நடை மருத்துவமனை அமைத்துத் தந்ததற்கு தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு ஒன்றியம், கருவேப்பம்பட்டி பஞ்சாயத்தில் உள்ள ஆத்தூராம்பாளையம், நாராயணபாளையம், சீனிவாசம்பாளையம், காட்டாம்பாளையம், வெள்ளநல்லாம்பாளையம், பொன்னைக்காடு, கடப்பங்காடு, அன்னை சத்தியா நகர், பட்டங்காடு, குதிரைப்பள்ளம்,

மாங்குட்டை, புதுப்பாளையம், தோட்டப்பள்ளி, திருநகர் காலனி ஆகிய இந்தப் பகுதிகளில் மொத்தம் 2,567 வீடுகள் உள்ளன. மக்கள்தொகை 10,200. 10,069 மாடுகள்; 186 எருமைகள்; 677 செம்மறி ஆடுகள்; 1,287 வெள்ளாடுகள்; 4,725 கோழிகள்; 434 வளர்ப்பு நாய்கள் இப்பகுதியில் இருக்கின்றன. இப்பகுதி மக்கள் விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த கால்நடை வளர்த்தலையே முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ளனர். இந்தப் பகுதிகளில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு ஏதேனும் மருத்துவ சிகிச்சை வேண்டுமெனில் 6 கிலோ மீட்டருக்குமேல் தொலைவிலுள்ள திருச்செங்கோடு கால்நடை மருத்துவமனைக்கோ அல்லது 6 கிலோ மீட்டருக்குமேல் தொலைவிலுள்ள தண்ணீர்பந்தல்பாளையம் கால்நடை மருந்தகத்திற்கோ செல்ல வேண்டியுள்ளது. எனவே, கருவேப்பம்பட்டி பஞ்சாயத்தின் மையப் பகுதியான சீனிவாசம்பாளையத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தரும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு தொகுதியில் சுமார் 55 ஆயிரம் மாட்டினங்கள், 77 ஆயிரம் ஆட்டினங்கள், 35 இலட்சம் கோழி இனங்கள் உள்ளன. இவற்றுக்கு மருத்துவச் சேவைகள் வழங்கிட 1 கால்நடை மருத்துவமனை, 13 கால்நடை மருந்தகங்கள், 1 நடமாடும் கால்நடை மருந்தகம், 1 கால்நடைக் கிளை நிலையம் செயல்பட்டு வருகின்றன. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தப் பகுதிக்கு கால்நடை பராமரிப்புத் துறையினுடைய இணை இயக்குநர் அவர்களை ஆய்வுக்கு அனுப்பி வைத்து, அந்தப் பகுதியில் கால்நடைக் கிளை நிலையம் தேவைப்படுமாயின், நிதிநிலைக்கு ஏற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.*

2020 மார்ச் 13]

திருமதி பொன். சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமர்கின்றேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

91—

ஆரம்ப சுகாதார நிலையம்

***52676—திரு. பி. மூர்த்தி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட காஞ்சரம்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட காஞ்சரம்பேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த வேண்டும் என்பது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தொடர் கோரிக்கை. ஏற்கெனவே மதுரை மேற்கு ஒன்றியத்தில், ஊராட்சிக்கு ஒன்று என்ற அடிப்படையில் சமயநல்லூரில், தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றது. எனினும், முன்னுரிமைப் பட்டியலில் காஞ்சரம்பேட்டை பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கின்றது. ஆகவே, வருங்காலத்தில் நிதிநிலைமைக்கேற்ப காஞ்சரம்பேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள்.*